மாலை மலர் - 05.07.2017.



பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி சமுதாயக்கூடத்திற்கு கழிவறை கட்டிடத்திற்கான ஒப்படைப்புக் கடிதத்தை முதன்மை பொதுமேலாளர் (உற்பத்தி) சுப்பிரமணியன் மற்றும் பொதுமேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் ஆகியோர் வழங்கிய காட்சி.

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# ரூ.40.62 லட்சம் மதிப்பில் கிராம பகுதியில் உள்கட்டமைப்பு பணி

வேலாயுதம்பாளையம், ஜூலை. 5-

கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித்திட்டத்தின் சார்பில் ரூ.40.62 லட்சம் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று அவரவர் வசம் ஒப்படைப்பு கடிதங்கள் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டது.

### மேம்பாட்டு பணிகள்

ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட ஆத்தூர் பகுதியில் அமைந்துள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.5.24 லட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டிடம், பரமத்தி வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பரமத்திவேலூர் பேரூராட்சி கிராம மக்களின் பயன்பாட்டிற்காக ரூ.6.17 லட்சம் செலவில் பொதுமக்கள் கழிவறைக்கட்டிடம்,

கோம்புபாளையம் ஊராட்சிக்குட்பட்ட கோம்புபாளையம் கிராம மக்களின் பயன்பாட்டிற்காக ரூ.4.32 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடத்தில் உணவருந்தும் அறை கட்டிடம், தமிழ்நாடு காகித ஆலை பேரூராட்சிக்குட்பட்ட மூலிமங்கலம் பகுதியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ரூ.9.49 லட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டிடம்,

பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பு.தோட்டக்குறிச்சி பகுதியில் அமைந்துள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.7.50 லட்சம் செலவில் மேற்கூரை, கணினி ஆய்வக அறை மற்றும் கூடுதல் பள்ளி அறைக் கட்டிடம், பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி சமுதாயக் கூடத்திற்கு ரூ.7.90 லட்சம் செலவில் கழிவறைக் கட்டிடம் ஆகியவை கட்டித்தரப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ.40.62 லட்சம் மதிப்பிலான இப்பணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அந்தந்த ஊராட்சி, பேரூராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் முதன்மை பொதுமேலாளர் (உற்பத்தி) சுப்பிரமணியன் மற்றும் பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் ஆகியோர் கலந்து கொண்டு ஒப்படைப்பு கடிதங்களை வழங்கினர்.